திங்கட்கிழமை, 1981, மே 11.

சித்திரை 29, துன்மதி, திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.''

அசைவற்ற தெளிந்த அறிவினையுடையவர் துன்பத்தில் சிக்குண்டாலும் அத்துன்பத்தைத் தீர்ப்பதற்காக இழிவான செயல்களைச் செய்யமாட்டார்.

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மத்திய அரசு இம்மாநிலத் திட்டங்களுக்கென ஒதுக்கிய தொகை.

*வினா எண் 1047— திரு. எஸ். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1977-1978, 1978-1979, 1979-1980ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு இம்மாநிலத் திட்டங்களுக்கென ஒதுக்கிய தொகைகளில் எந்தெந்த இனங்களில் எவ்வளவு ரூபாய் செலவிடப்படாமல் மத்திய அரசுக்கு திரும்ப அளிக்கப் பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 1977-78, 1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு இம்மாநிலத் திட்டங் களுக்கென ஒதுக்கிய தொகைகள் முழுவதும் கிடைக்கப்பெற்று பயன்படுத்தப்பட்டு விட்டன. ஆகவே எந்த தொகையும் செலவிடப்படாமல் மத்திய அரசுக்கு திரும்ப அளிக்கப்பட வில்லை.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை அரசு விடுமுறையாக அறிவிக்கும் திட்டம்.

*வினா எண் 1048— திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை அரசு விடுமுறையாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, நாட்டுத் தலைவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு, இந்திய நாட்டில் பிற மாநிலங்களில் வேறு எந்த தலைவர்களுக்காவது விடுமுறை வழங்கப்பட்டுள்ளதா? எந்த எந்த மாநிலங்களில் விடுமுறை விடப்பட்டிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; தலைவரவர்களே, நாட்டுத் தலைவர்களுக்கு வேறு மாநிலங்களில் எந்த எந்த தலைவர்களுக்கு விடுமுறை விட்டிருக்கிறார்கள் என்று குறிப்பு இந்த மாநில அரசைப் பொறுத்தமட்டில் இல்லை. நம்முடைய மாநிலத்தில் திருவள்ளுவர் பிறந்தநாளை விடுமுறை விட்டு, கொண்டாடுகிறோம். அதைப் போல அண்ணல் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2-ம் நாளை அரசாங்க விடுமுறை நாளாகக் கொண்டாடுகிறோம்.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தலை நிமிரச் செய்த அந்த அண்ணாவின் திருவுருவப் படத்தை அனைத்து அரசு அலுவலகங்களிலும் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, யார், யார் படங்களை நாம் வைக்கலாம் என்ற குறிப்புகள் ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே அறிஞர் அண்ணாவின் படமும் இடம் பெற்றிருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, அண்ணா பிறந்த நாள் அன்று மட்டும் விடுமுறை விட்டு விட்டு, மற்ற ஒரு நாள் விடுமுறை நாளாக வருகின்ற ஏதாவது ஒரு சனிக்கிழமை பணி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவை அரசு கொண்டாடுகிறது. தமிழ்நாட்டுக்குப் பெருமையும் புகழும் சேர்த்துத்தந்த தலைவர்களுக்கு பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகிறது. ஆனால் விடுமுறை விடுவது என்பது அண்ணல் காந்தியடிகள் ஒருவருக்கு மட்டுமே ஒருநாள் விடுமுறை விடப்படுகிறது. ஏற்கெனவே பல்வேறு வகையிலும் 20 நாள் விடுமுறையாக அமைந்துவிட்டது. மேற்கொண்டும் விடுமுறை விடுவதாக இல்லை. அறிஞர் அண்ணா, பெரும் தலைவர் காமராஜ் போன்றவர்கள் உழைக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர ஓய்வு பெறவேண்டுமென்று அவர்கள் சொல்லவே இல்லை. அவர்களுக்கெல்லாம் பெருமை தேடி தருகின்ற வகையில் உழைத்து பணியாற்றினால்தான் பெருமை தருவதாக இருக்கும்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களுடைய திருவுருவப் படம் அரசு அலுவலகங்களிலே இருத்தல வேண்டுமென்று அரசு அறிவித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படி இருந்த போதிலும் கூட பல்வேறு அலுவலகங்களில் அண்ணா

அவர்களுடைய படம் இல்லாத நிலை இன்றும் இருந்து வருகிறது. அதை எடுத்து அறிவித்தால், அரசு அலுவலகங்களில் அந்தப் படங்களைக் கண்டிப்பாக மாட்டவேண்டுமென்ற விதி முறையை அந்த அலுவலகங்களுக்கு அரசு சார்பிலே தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, படத்தை கட்டாயம் மாட்டியே தீரவேண்டுமென்று உத்தரவு இல்லை. அண்ணல் காந்தி அடிகள், பண்டித ஜவஹர்லால் நேரு, முன்னாள் முதலமைச்சர்களாக இருந்த பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜ் ஆகியோர் படங்களும், திருவள்ளுவர் படமும் அரசு அலுவலகங்களில் வைக்கப்படுவதில் ஆட்சேபணை இல்லை என்று உத்தரவில் இருக்கிறதே தவிர கட்டாயம் வைத்துத் தீரவேண்டும் என்று இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் என். ஜி. ஓக்களுக்குக் கொடுக்கும் சலுகைகளையும் சம்பள உயர்வையும் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில் பிறந்த தினத்தை முன்னிட்டு அறிவிக்கப் படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்பொழுதுதான் என்றால், ஆண்டுக்கு ஒரு முறைதான் சொல்லவேண்டி வரும். அதுவரையில் அவர்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டி வரும். அவர்களையெல்லாம் காத்துக் கொண்டிருக்கும்படியான பணியைச் செய்வதிலே அவர் வெற்றி பெறுவாரேயானால், அப்படி ஒரு முடிவைக் கூட நாம் எடுக்கலாம். ஆனால் அந்தச் சலுகைகளையும், சம்பள உயர்வையும், அவ்வப்போது எடுக்க வேண்டிய முடிவுகளாக இருப்பதால், குறிப்பிட்ட நாளிலே அதற்கென ஒதுக்கித் தர இயலாது என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, நம் நாட்டினுடைய தேசிய விடுதலை இயக்கத்தில் ஒரு ஆண்டில் ஒரு வாரத்தை எடுத்து அந்த வாரத்திலே, ஒவ்வொரு நாட்களுக்கும் ஒரு விதமான குணத்தை ஏற்படுத்தி அதாவது சமுதாய சமதர்மத்திற்கு ஜாதி மத ஒழிப்பிற்கு, வகுப்பு வாத ஒற்றுமைக்கு, இவ்வாறு சில விதமான வாரங்களைக் கொண்டாடுகிற முறையிலே தமிழக அரசு ஒரு வாரத்தை ஏற்படுத்தி, தேசியத் தலைவர்களுடைய சீரிய கொள்கைகளை அமுல் நடத்தப் பிரச்சாரம் செய்யக்கூடிய வகையில் ஒரு வாரத்தை உருவாக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா, நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற அத்தகைய எண்ணம் இல்லை. இப்பொழுது தமிழக அரசைப் பொறுத்தவரையில் ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக 2 வது சனிக்கிழமை விடுமுறை விடப்படுகிறது. ஆக மொத்தம் 60 நாட்கள் அந்த வகையில் அரசு விடுமுறைகளாக வருகின்றன. மேற்கொண்டும் 20 நாட்கள் விசேஷ தினங்களை முன்னிட்டு விடப்படுகிறது, ஜனவரி முதல்நாள்: பொங்கல்

திருநாள், திருவள்ளுவர் நாள், உழவர் திருநாள், குடியரசு நாள், பக்ரீத் பண்டிகை, முகரம், தெலுங்கு புத்தாண்டு நாள், தமிழ் புத்தாண்டு நாள், பெரிய வெள்ளிக் கிழமை, மே தினம், சுதந்தர தின நாள், விநாயகர் சதுர்த்தி, காந்தி ஜெயந்தி, ஆயுத பூஜை, தீபாவளி, ரம்சான், கிறிஸ்து பிறந்த நாள் போன்ற காரணங்களுக்காக விடப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று, இந்த தினங்களில் தலைவர்களுடைய பெயர்களில் யாருடைய பெயரையாவது ஏற்று அந்த நாட்களாக அவர்களுடைய நினைவில் சமதர்ம நாள் என்றோ, ஜனநாயக நாள் என்றோ, மக்கள் நலம்பெறும் நாள் என்றோ, அல்லது நாம் இப்போது ஏற்படுத்தியிருப்பதைப் போல காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம மக்கள் நலம் பெறுகிற வாரம் என்று கொண்டாடுவதைப் போல, ஏற்றுக்கொள்வலாமே தவிர, மேற்கொண்டு நாட்களை ஒதுக்கி விடுமுறை தருகிற அளவிற்கு சட்டம் இடம் தரவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

பின்னலூர் கிராமம் வாலாஜா ஏரிப் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு.

*வினா எண் 1049—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சிதம்பரம் வட்டம் பின்னலூர் கிராமத்தில் வாலாஜா ஏரி என்ற பெயரில் உள்ள நிலங்களைத் தாழ்த்தப் பட்ட மக்கள் பயிரிடுபவர்களுக்கு 5 மடங்கு தீர்வை போட்டு அவர்கள் மகசூலை அனுபவிக்க முடியாது செய்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஏன் பட்டா செய்யப்படவில்லை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் தரத் தீர்வையாகவும், தண்டத் தீர்வையாகவும் 10 ரூபாய் தான் போடப்பட்டிருக்கிறது. ஏரியின் உள்புறம் இருக்கும் இடங்களைப் பட்டா போட்டுக் கொடுப்போமேயானால் அதனுடைய ஆயக்கட்டு பாதிக்கப்படும் என்று மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவரும் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து உண்மையான தகவலை அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன். காரணம் ஒரு ஏக்கருக்கு 10 ரூபாய் என்று சொல்லிய பிறகும் 50 ரூபாய் கட்டியதற்கான ரசீதும் இருக்கிறது என்பது உண்மை. அத்தோடு கூட, அதே தாலூகாவில் வளையமாதேவி, திருநாரையூர், வீராணநல்லூர் போன்ற இடங்களில் அதேபோன்று, ஏரியின் உள்ளே இருக்கும்